**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 220 of 2016**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : மகேஷ்** | **Father/Husband's Name : கோபாலகிருஷ்ணன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 20.07.2026.**

**A1, A2, A3, A4, A7 present. A5, A6 absent. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது துணை வட்டாட்சியராக திண்டுக்கல் புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 20.09.2015ம் தேதி பழனி வருவாய் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 20.09.2015 முதல் 22.09.2015ம் தேதி வரை மூன்று தினங்கள் விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்திற்கு இந்து அமைப்புகள் அனுமதி கேட்டிருந்தார்கள். WPMD 16349/2015–ன் 16.09.2015ம் தேதி பிறப்பித்த உத்தரவில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளுடன் 17.09.2015ம் தேதி பழனி வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் இந்து அமைப்பினர்களை அழைத்து மேற்படி உயர்நீதிமன்ற உத்தரவின்படியான வழிமுறைகளை தெரிவித்து காலை 10.00 மணி முதல் சூர்ய அஸ்தமனத்திற்குள் விநாயகர் ஊர்வலத்தை சண்முக நதியில் முடித்துவிட வேண்டும் எனவும், கரைத்துவிட வேண்டும் எனவும் தெரிவித்து கையொப்பம் பெறப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நகல் வழங்கப்பட்டது. இந்து முன்னனி அமைப்பினர் பங்கேற்றனர். அதில் BJP, VHP ஆகிய அமைப்புகளில் உள்ள மாவட்ட செயலாளர் ஜெகன், செந்தில்குமார், இந்து முன்னனி அருண், VHP செந்தில்குமார், BJP கனகராஜ், தீனதயாளன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். மேற்படி கூட்டத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படாத வண்ணம் நடந்து கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டது. பின்னர் 20.09.2015ம் தேதி மாலை 3.15 மணிக்கு நானும்,

கிராம உதவியாளராக இருந்த மைக்கேல், பழனி நகர் சார்பு ஆய்வாளர் ஞானசேகரன் ஆகியோர்கள் சேர்ந்து அடிவாரம் பாதவிநாயகர் கோவில் முன்பு கூடியிருந்த மேற்படி இந்து அமைப்பினரிடம் மேற்படி ஊர்வலத்தை துவக்கி உரிய நேரத்தில் முடிக்குமாறு அறிவுறுத்தியும் அவர்கள் கலந்து செல்லுமாறு சொன்ன பிறகும் மேற்படி உத்தரவை மீறி என்னை பார்த்து உங்க வேலையை பாருங்க என பேசி, எனது வேலையை செய்யவிடாமல் மேற்படி ஊர்வலத்தை துவக்கவிடாமல் பழனி மலைக்கு செல்லும் பக்தர்களை தடுத்து கூட்டமாக கூடி மாலை 5.00 மணியளவில் மேற்படி ஊர்வலத்தை துவக்கி சண்முகநதிக்கு 8.00 மணிக்கு சென்று கரைக்க ஆரம்பித்து 10.00 மணி வரை கரைத்தார்கள். அதற்கு பிறகு நான் அடிவாரம் காவல் நிலையம் வந்து எதிரிகள் மீது புகார் கொடுத்தேன். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** எதிரிகள் உயர்நீதிமன்ற உத்தரவை மீறி நடந்து கொண்டதால் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தேன். ஆஜர் எதிரிகள் ஜெகன், செந்தில்குமார், அருண், தீனதயாளன் ஆவார்கள். மற்றொருவரின் பெயர் ஞாபகமில்லை. செந்தில்குமார், கனகராஜ் ஆகியோர்களை எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. நான் பழனியில் வருவாய் ஆய்வாளராக நீண்ட காலம் பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். எதிரிகளாக சொல்லப்பட்ட நபர்களை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றால் சரிதான். விநாயகர் ஊர்வலம் ஒவ்வொரு வருடமும் நடக்கும் விசேசம் என்றால் சரிதான். அவ்வாறு ஊர்வலம் நடக்கும்போது எதிரிகளுக்கு மாண்பமை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் வருவாய் துறையில் பிறப்பித்த உத்தரவை கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த வருவாய் உத்தரவு நகலை போலிஸ் விசாரணையில் கொடுத்தேனா என்றால் இல்லை. ஆலோசனை கூட்டம் நடைபெற்ற Minutesஐ விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரிகள் விநாயகர் ஊர்வலத்தை சம்பிரதாய அடிப்படையில் குறித்த நேரத்தில், குறித்த இடத்தில் நடத்தினார்கள் என்றால் இல்லை. முருக பக்தர்கள் யாரோ தனிப்பட்ட முறையில் என்னிடம் புகார் எதுவும் வாய்மொழியாக அல்லது எழுதி கொடுத்தார்களா என்றால் இல்லை. மேற்படி விநாயகர் ஊர்வலத்தில் கலந்து கொண்ட வாகனங்களின் எண்ணிக்கை, வாகனங்களின் பதிவெண், நபர்களின் பெயர், நபர்களின் எண்ணிக்கை குறிப்பிட்டு புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. பாதவிநாயகர் கோவில் முதல்

சண்முக நதி வரை எவ்வளவு தூரம் என்றால் சுமார் 5 கி.மீ. இருக்கும். பாதவிநாயகர் கோவிலில் இருந்து சண்முக நதி வரை செல்லும் பாதைகள் அனைத்தும் அகலமான நெடுஞ்சாலைகள் என்றால் சாலை அகலமானது தான். மேற்படி ஊர்வலம் ஆரம்பித்த நேரம் குறித்து Photo, Video எதுவும் அவ்வாறு மீறிவிட்டார்கள் என்று சொல்லி தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காவல் துறையின் புள்ளியல் கணக்கிற்காக வருவாய் துறையான என்னிடம் பொய்யான புகார் மனு பெறப்பட்டு இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரிகள் குற்றமற்றவர் என்றாலும் சரியல்ல. புகார் மனுவில் நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த குற்ற சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. காவல் துறைக்கு ஆதரவாக எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்ன வகையில் எந்த எதிரி எந்த பணியை தடுத்தார் என்று புகார் மனுவில், விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த அசிங்கமான வார்த்தைகளை எதிரிகள் பயன்படுத்தினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த அமைப்புகள் வருவாய் துறையிலும், காவல் துறையிலும் முறையான அனுமதி பெற்று தான் ஊர்வலம் நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான், உரிய நேரத்தில் நடத்தவில்லை.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.07.20 18:08:17 +0530

நீதித்துறை நடுவர்,

பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 220 of 2016**

**Deposition of Witness P.W.2**

| | |
|---|---|
| **Name : மைக்கேல்** | **Father/Husband's Name : சலேத்துமுத்து** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 20.07.2026.**

**A1, A2, A3, A4, A7 present. A5, A6 absent. Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பழனி நகர் கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மகேஷ், பழனி வருவாய் ஆய்வாளராக வேலை பார்த்தார். அவரிடம் நான் வேலை பார்த்துள்ளேன். கடந்த 20.09.2015ம் தேதி இந்து அமைப்புகள் விநாயகர் ஊர்வலம் நடத்த அனுமதி கேட்டிருந்தார்கள். அப்போது வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் உயர்நீதிமன்ற ஆணைப்படி காலை 10.00 மணி முதல் சூர்ய அஸ்தமனத்திற்குள் மேற்படி ஊர்வலத்தை நடத்தி முடிக்குமாறு அவர்களிடம் அறிவுறுத்தி உத்தரவு பிறப்பித்தார்கள். பின்னர் 20.09.2015ம் தேதி மாலை 3.00 மணியளவில் நானும், வருவாய் ஆய்வாளர் மகேஷ்–ம், சார்பு ஆய்வாளர் ஞானசேகரன் அவர்களும் பாதவிநாயகர் கோவில் பழனி மலைக்கோவில் அருகே அலுவலில் இருந்தபோது இந்து அமைப்பினர் ஊர்வலத்தை நடத்த நேரமாகிவிட்டது என இந்து அமைப்பினரிடம் அறிவுறுத்தி ஊர்வலத்தை தொடங்குமாறு மகேஷ் அவர்கள் மற்றும் போலிசார் அவர்களிடம் சொன்னபோது, அப்போது இந்து அமைப்பினர்கள் எப்போது ஊர்வலத்தை நடத்த வேண்டுமென எங்களுக்கு தெரியும், உங்கள் வேலையை நீங்க பாருங்க என எங்களை பார்த்து அவர்கள் கூறினார்கள். பின்னர் மேற்படி இந்து அமைப்பினர் உரிய நேரத்தில் ஊர்வலத்தை நடத்தாமல் மாலை 5.00 மணிக்கு ஊர்வலத்தை ஆரம்பித்து இரவு 8.00 மணியளவில் சண்முகநதியில் இருந்து 10.00 மணி வரை உயர்நீதிமன்ற ஆணையை மீறி கரைத்து கொண்டிருந்தார்கள். மேற்படி புகார் சம்மந்தமாக வருவாய் ஆய்வாளர் பணி

செய்யவிடாமல் தடுத்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க அடிவாரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். ஆஜர் எதிரிகள் இந்து முன்னனி மாவட்ட செயலாளர் ஜெகன், அதே அமைப்பை சேர்ந்த அடிவாரம் பாலன், VHBஐ சேர்ந்த செந்தில்குமார், இந்து முன்னனி அருண், BJP தீனதயாளன் ஆஜர் எதிரிகள் ஆவார்கள். செந்தில்குமார், கனகராஜ் ஆகியோர்களை எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. நான் தற்போது என்னவாக வேலை செய்தேன் என்றால் கிராம உதவியாளராக இருந்தேன். அ.சா.1 மகேஷ் எனது மேல் அதிகாரி என்றால் சரிதான். அ.சா.1 கேட்டு கொண்டதால் சம்பவம் பற்றி தெரியாமல் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. எத்தனை மணிக்கு அடிவாரம் போனோம் என்றால் 3.15 மணிக்கு போனோம். அதற்கு முன்பு அடிவாரம் போகவில்லை என்றால் காலை 10.00 மணியளவில் போய் பார்த்துவிட்டு வந்து அதற்கு பிறகு 3.15 மணிக்கு போனோம். நான் காலையில் சென்று வந்த விபரத்தை அ.சா.1–யிடம் சொன்னேனா என்றால் ஆமாம்,அ.சா.1யிடமும், VAO யிடமும் 11.00 மணிக்கு சொன்னேன். நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் மேல் அதிகாரியிடம் சொல்லியிருந்தால் அவர் குறித்த நேரத்தில் நடவடிக்கை எடுத்திருப்பார் என்பதால் நான் சம்பவயிடம் செல்லாமல் சென்றதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த குற்ற நிகழ்வும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 மேல் அதிகாரி என்பதால் அவருக்கு கட்டுப்பட்டு அவரது அறிவுறுத்தல்பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார் மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் புகார் மனுவில் சாட்சி கையொப்பம் போட்டேனா என்றால் இல்லை. அ.சா.1–உடன் காவல் நிலையம் சென்றிருந்தால் புகார் மனுவில் சாட்சி கையொப்பம் போட்டிருப்பேன் என்பதால் நான் போகவில்லை என்றால் சரியல்ல.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.07.20 18:08:26 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.